

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (7.3.2025) தலைமைச் செயலகத்தில், அரசு சட்ட அலுவலர்கள், உயர்நீதிமன்றத்தின் பெண்கள் வழக்கறிஞர் சங்கத்தின் தலைவர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் உலக மகளிர் தினத்தையொட்டி சந்தித்த போது, முதலமைச்சர் மகளிர் தின வாழ்த்துகளைத் தெரிவித்தார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ. ரவீந்திரன் ஆகியோர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (7.3.2025) தலைமைச் செயலகத்தில், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் சந்தித்து, ஒன்றிய அரசின் வேளாண் சந்தைப்படுத்துதல் குறித்த தேசிய கொள்கை தொடர்பாக கோரிக்கை மனு அளித்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.3.2025) சென்னை, தீவுத்திடலில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 113 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரைத் தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் 1,63,039 சதுர அடி கட்டடப் பரப்பளவில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கண்காட்சி மையத்தை உள்ளடக்கிய பொது சதுக்கப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விடம் மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அன்சுல் மிஸ்ரா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (7.3.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையத்தின் புதிய நிர்வாகிகள் துணைத் தலைவர் இமயம் (வெ. அண்ணாமலை), உறுப்பினர்கள் செ. செல்வக்குமார், முனைவர் சு.ஆனந்தராஜா, மு.பொன்தோஸ், பொ.இளஞ்செழியன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையத்தின் தலைவர் நீதியரசர் (ஓய்வு) ச. தமிழ்வாணன், உறுப்பினர் ரேகா பிரியதர்ஷினி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நல இயக்குநர் த.ஆனந்த், தாட்கோ மேலாண்மை இயக்குநர் கே.எஸ். கந்தசாமி, பழங்குடியினர் நல இயக்குநர் எஸ்.அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## பொதுமக்களின் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்திட

# ஆட்டோ ரிக்ஷா - வாடகைக் கார்களுக்கு காவல் உதவி குறியீடு!

## சென்னை பெருநகர காவல்துறை சார்பில் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, மார்ச் 8 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.3.2025) தலைமைச் செயலகத்தில், சென்னை பெருநகர காவல்துறையின் முன்முயற்சியாக, சென்னை மாநகரில் பொதுமக்கள் ஆட்டோ ரிக்ஷாக்கள் மற்றும் வாடகை கார்களில் பாதுகாப்பான பயணம் மேற்கொள்ளும் வகையில் காவல் உதவி QR குறியீடுகளை வழங்கிடும் விதமாக ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்களிடம் QRகுறியீடுகளை வழங்கினார்.**

சென்னை மாநகருக்குள் பயணிகள், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை மேம்படுத்தவும், பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்யவும், சென்னை பெருநகர காவல்துறை, ஆட்டோரிக்ஷாக்கள் மற்றும் வாடகை கார்களுக்கு QR குறியீடு அடிப்படையிலான அவசரகால பதில் அமைப்பை அறிமுகப் படுத்தியுள்ளது. இந்த முயற்சி, நிகழ்நேர கண்காணிப்பு, அவசரகால பதில் வழிமுறைகள் மற்றும் ஏற்கனவே உள்ள வாகன வழி தளங்களுடன் தடையற்ற ஒருங்கிணைப்பை வழங்க, இந்த தொழில்நுட்பம் சார்ந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை பயன்படுத்துகிறது.

சென்னை மாநகரில் காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்கள் / மாநகராட்சிகளில் இருந்து வரும் வாகனங்கள் உட்பட 89,641 ஆட்டோரிக்ஷாக்கள் இயங்குகின்றன. இவற்றில், 78,000 ஆட்டோரிக்ஷாக்கள் ஊபர், ரேபிடோ மற்றும் ஓலா போன்ற வாகன சேவைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

பயணிகள் மற்றும் ஓட்டுநர்களின் பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையில், சென்னை பெருநகர காவல்துறை முதல் கட்டமாக, ஒவ்வொரு ஆட்டோரிக்ஷாக்கள் மற்றும் ஷேர் ஆட்டோக்களுக்கும் 88,859 தனிப்பயனாக்கப்பட்ட (Customized) மற்றும் பிரத்யேக தனித்துவமான QR குறியீட்டை உருவாக்கியுள்ளது. இந்த QR குறியீடு ஆட்டோரிக்ஷா / வாடகை கார்களின் ஓட்டுநர் இருக்கைக்குப் பின்னால் ஒட்டப்படும். இதை பயணிகள் எளிதாக ஸ்கேன் செய்து கொள்ளலாம்.

அவசரநிலை ஏற்பட்டால், SOS பட்டனை அழுத்தினால், சென்னை பெருநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறைக்கு ஒரு எச்சரிக்கை குறுஞ்செய்தி அனுப்பப்படும், இது ஆட்டோரிக்ஷாவின் சரியான இடம் மற்றும் அதன் விவரங்கள், உரிமையாளரின் விவரங்கள் போன்றவை கட்டுப்பாட்டு அறைக்கு தெரியவரும். கூடுதலாக, பயணிகள் 112 என்ற அவசர கட்டுப்பாட்டு அறை எண்ணிற்கு அழைத்து உடனடி உதவியை உறுதிசெய்யும் வசதியும் இதில் உள்ளது.

இப்புதிய QR குறியீட்டின் முக்கிய நன்மை என்னவென்றால், SOS எச்சரிக்கை அழுத்தும்போது, பயணிகளின் சரியான இடம் காவல் கட்டுப்பாட்டு அறைக்கு உடனடியாகத் தெரியவருவதால், குறிப்பாக இரவு நேரங்கள் அல்லது தனி சவாரிகளின் போது காவல்துறையினரின் ரோந்து வாகனங்களின் மூலம் துல்லியமாக சம்பவ இடத்திற்கு சென்று உதவியை அணுகும் வசதியும் உள்ளது.

மேலும், சென்னை பெருநகர காவல் துறை, Rapido, Ola மற்றும் Uber போன்றவற்றுடன் இணைந்து, தங்கள் அவசர எச்சரிக்கைகளை சென்னை பெருநகர காவல் கட்டுப்பாட்டு அறையுடன் ஒருங்கிணைக்கிறது. இந்த வாகனங்களில் பயணம் செய்பவர்களின் பயன்பாடுகள் மூலம் செய்யப்படும் எந்தவொரு SOS அழைப்பும் சென்னை பெருநகர காவல் கட்டுப்பாட்டு அறைக்கு நேரடியாக அனுப்பப்படும், இதனால் காவல்துறை அதிகாரிகள் பயணிகளின் வேண்டுகோளின் பேரில் பயணத்தின் நிகழ்நேரத்தை கண்காணிக்க முடியும். அவசரநிலை ஏற்பட்டால், போக்குவரத்து கட்டுப்பாட்டு அறை காவலர்களால் வாகனத்தின் நிகழ்நேரத்தை கண்காணித்து, அதற்கேற்ப ரோந்து வாகனங்களின் மூலம் உதவிட முடியும்.

பெண்கள், குழந்தைகள் மற்றும் பெருநகரத்திற்கு பயணிக்கும் அனைத்து பயணிகளுக்கும் பாதுகாப்பான பயணத்தை இப்புதிய QR குறியீடு உறுதி செய்கிறது. இதன்மூலம், சென்னை முழுவதும் ஒரு விரிவான பாதுகாப்பு வலையமைப்பு உருவாக்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், கூடுதல் ஆணையர் (போக்குவரத்து) ஆர்.சுதாகர் மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ தொடர்பாக,

# நாடாளுமன்ற கூட்டுக்குழு மீண்டும் கூடுகிறது!

## மார்ச் 11, 17 – தேதிகளில் நடைபெறுகிறது!

*புதுடெல்லி, மார்ச் 8 -*

*ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பாக, நாடாளுமன்றக் கூட்டுக்குழு கூட்டம் வரும்11 மற்றும்17ம் தேதிகளில் மீண்டும் நடைபெறுகிறது.*

*இந்த விவகாரம் குறித்து கருத்து தெரிவிக்குமாறு உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய்க்கு ஒன்றிய அரசு அழைப்பு விடுத்துள்ளது.*

*ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பாக அமைக்கப்பட்ட, முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையிலான குழுவினர் ஒன்றிய அரசிடம் அறிக்கை அளித்துள்ளது. இந்த அறிக்கையை நாடாளுமன்ற கூட்டுக்குழுவுக்கு அனுப்பவேண்டும் என்று காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.*

*இதையடுத்து, ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பான மசோதாக்கள் நாடாளுமன்றக் கூட்டுக்குழுவுக்கு ஒன்றிய அரசு அனுப்பியுள்ளது.*

*இந்நிலையில், ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பாக, நாடாளுமன்றக் கூட்டுக்குழு கூட்டம் வரும் 11 மற்றும் 17 ஆம் தேதிகளில் மீண்டும் நடைபெறுகிறது.*

*கடந்த கூட்டத்தில் உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி யூ.யூ.லலித் அழைக்கப்பட்டார். அப்போது, ஒன்றிய அரசின் ஒரே நாடு, ஒரே தேர்தல் தொடர்பான இரண்டு மசோதாக்களும் குறைபாடுகள் நிறைந்ததாக உள்ளதாகவும் அரசியல் சாசனத்துக்கு எதிராக உள்ளதாகவும் உச்சநீதிமன்றம் சென்றால் மசோதாக்கள் ரத்து செய்யப்பட வாய்ப்புள்ளது என்று எச்சரித்திருந்தார்.*

*இந்நிலையில், வரும் 11 ஆம் தேதி நடைபெற உள்ள கூட்டத்துக்கு முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி ரஞ்சன் கோகாய் அழைக்கப்பட்டுள்ளார். இவர் மாநிலங்களவை நியமன உறுப்பினராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.*

## 2024 நாடாளுமன்றத் தேர்தலில்

# தயாநிதிமாறன் எம்.பி. வெற்றி பெற்றது செல்லும்!

## உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு!

சென்னை, மார்ச். 8-

நடந்து முடிந்த 2024 நாடாளுமன்றத் தேர்தலில் மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முன்னாள் ஒன்றிய தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளருமான திரு.தயாநிதி மாறன் போட்டியிட்டார். இதற்கு முன்பும் மத்திய சென்னையில் போட்டியிட்டு 2004, 2009 மற்றும் 2019 நாடாளுமன்ற தேர்தல்களில் திரு.தயாநிதி மாறன் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது வரலாறு.



2024 நாடாளுமன்றத் தேர்தலில் இதே மத்திய சென்னை தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட தயாநிதி மாறன் அவர்களை எதிர்த்து தே.மு.தி.க. சார்பில் பார்த்தசாரதி, பா.ஜ.க. சார்பில் வினோஜ் பி செல்வம், நா.த.க. சார்பில் ஆர்.கார்த்திகேயன் உட்பட 30 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். பாஜக சார்பில் போட்டியிட்ட வினோஜ் பி செல்வத்தை சுமார் 2,50,000 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து, அமோக வெற்றி பெற்றார் தயாநிதி மாறன்.

‘அவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது செல்லாது’ என அறிவிக்கக் கோரி மத்திய சென்னை தொகுதியில் தேசிய மக்கள் சக்தி கட்சி சார்பில் போட்டியிட்ட எம்.எல்.ரவி என்பவர், சென்னை உயர் நீதிமன்றத்தில் 18.07.2024 அன்று வழக்கு தாக்கல் செய்தார்.

அதில், ‘ தேர்தல் பிரச்சாரம் ஏப்ரல் 17ம் தேதி நிறைவடைந்த நிலையில், ஏப்ரல் 19ம் தேதி வாக்குப் பதிவு நாளான்று தயாநிதி மாறன் பிரச்சாரம் மேற்கொண்டதாகவும், இது மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்துக்கு எதிரானது ’ எனவும் கூறியிருந்தார் எம்.எல். ரவி. மேலும் ‘ தேர்தல் ஆணையத்தால் அனுமதிக்கப்பட்ட 95 லட்சம் ரூபாயை விட அதிகத் தொகையை திமுக வேட்பாளர் தயாநிதிமாறன் செலவிட்டதாகவும் ‘ மனுவில் குறிப்பிட்டுருந்தார்.

எம்.எல்.ரவி தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் தவறானது என்பதால், அவற்றை நீக்கக் கோரி தயாநிதி மாறன் தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுவை இன்று விசாரித்த நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், ‘மனுதாரர் எம்.எல்.ரவியின் தேர்தல் வழக்கை தொடர்ந்து விசாரிக்க எந்தக் காரணங்களும் இல்லை’ எனக் கூறி, அந்த வழக்கை தள்ளுபடி செய்து, ‘தயாநிதி மாறன் அவர்களின் வெற்றி செல்லும்’ என உத்தரவிட்டார்!

## நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பில் பாதிப்படைய வாய்ப்புள்ள

# 7 மாநிலங்களில் 29 கட்சிகளுக்கு கடிதம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அனுப்பினார்!

**சென்னை, மார்ச் 8-**

**நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பில் பாதிப்படைய வாய்ப்புள்ள 7 மாநிலங்களில் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் உள்ள 29 கட்சிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

அதன் விபரம் வருமாறு:-

கேரள மாநில பாரதிய ஜனதா கட்சியின் குன்னும்மல் சுரேந்திரன், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் எம்.வி.கோவிந்தன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பினாய் விஸ்வம், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் கும்பக்குடி சுதாகரன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் பாணங்காடு செய்யித் சாதிக் அலி ஷிஹாப் தங்கல், கேரளா காங்கிரஸ் கட்சியின் பி.சி.ஜோசப், கேரளா காங்கிரஸ் (மணி) கட்சியின் ஜோஸ் கே.மணி, புரட்சிகர சோசலிஸ்ட் கட்சியின் ஷிபு பேபி ஜான்;

ஆந்திரப்பிரதேச மாநில தெலுங்கு தேசம் கட்சியின் பல்ல சீனிவாசராவ், ஜனசேனா கட்சியின் கே.பவன் கல்யாண், பாரதிய ஜனதா கட்சியின் திருமதி தகுபதி புரந்தேஸ்வரி;

தெலுங்கானா மாநில இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மகேஷ்குமார் கவுட், பாரத் ராஷ்டிர சமிதி கட்சியின் கே.சந்திரசேகர ராவ், அகில இந்திய மஜ்லிஸ்இித்தேஹாதுல் முஸ்லிமீன் கட்சியின் அசாதுதீன் ஒவைசி, பாரதிய ஜனதா கட்சியின் ஜி.கிஷன் ரெட்டி;

கர்நாடகா மாநிலத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் டி.கே.சிவகுமார், ஜனதா தளம் (மதச்சார்பற்ற) கட்சியின் ஹெச்.டி.குமாரசாமி, பாரதிய ஜனதா கட்சியின் பி.ஒய். விஜயேந்திரா; மேற்கு வங்காள மாநிலத்தின் பாரதிய ஜனதா கட்சியின் டாக்டர். சுகந்தா மஜூம்தார், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் முகமது சலீம், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சுபாங்கர் சர்க்கார்;

ஒடிசா மாநில பாரதிய ஜனதா கட்சியின் மன்மோகன் சாஹல், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் பக்த சரண் தாஸ்;

பஞ்சாப் மாநில இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் அம்ரீந்தர் சிங் ராஜா வாரிங், ஆம் ஆத்மி கட்சியின் அமன் அரோரா, சிரோன்மணி அகாலி தல் கட்சியின் பல்வீந்தர் சிங் பந்தர் ஆகியோருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.